# இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்பாக அனுப்புகிறேன். யாத் 20 : 23

தேவ தூதர்களுடைய உதவியை அனுபவியுங்கள். வழியில் உன்னைக் காக்கிறதற்கும் நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கும் உன்னைக் கொண்டுபோய் சேர்க்கிறதற்கும் இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்.

**தேவ தூதர்களுடைய உதவியை நாடுங்கள்.**

**முதலாவது வழியில் உன்னைக் காப்பார்**

**சங். 91 : 11 கூறுகிறது,** உன் வழிகளிளெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். ஆம் தூதர்களுடைய வேலைகளில் ஒன்று நம்முடைய வழிகளிலெல்லாம் நம்மைக் காப்பது ஆகும்.

**நீதி. 3 : 5 கூறுகிறது :** உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார்.

ஆம், பிரியமானவர்களே,

நம்முடைய வழிகளிளெல்லாம் தூதர்கள் நம்மைக் காக்க வேண்டுமானால் நாம் முதலாவது செய்ய வேண்டியது, நம்முடைய வழிகளிளெல்லாம் கர்த்தரை நினைத்துக் கொள்ள வேண்டும்.

**ஏனென்றால், எரே. 10 : 29 கூறுகிறது :** கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும் தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்.

**மேலும், 1 நாளா. 28 : 9 கூறுகிறது :** கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார். நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார். நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றென்றைக்கும் கைவிடுவார் – என்பதாக.

தேவனுடைய பிரதான நோக்கம், அவர் உனக்காக ஆயத்தம் பண்ணியுள்ள ஸ்தலத்திற்கு கொண்டு போவதற்காகவே ஆகும். ஆதலால், தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவர் ஆயத்தப்படுத்தியிருக்கும் ஸ்தானத்திற்கு உன்னைக் கொண்டுபோக ஒப்புக்கொடுப்பாயா ?

வேலை ஸ்தானத்தில் இருக்கிற உன்னை தேவன் ஊழிய ஸ்தானத்திற்கு கொண்டுபோக விரும்புகிறார், நீ தேவனுடைய அழைப்பை அசட்டை பண்ணினதால் எத்தனை இடறல் ? ஆனாலும் தேவன் தமது தூதர்களை அனுப்பி உன்னை காத்து வருகிறார். இன்னும் காப்பார்.

**சங். 91 : 12 கூறுகிறது . .**

உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள். – என்பதாக.

**எசேக். 12 : 3 கூறுகிறது . .**

இப்போதும் மனுபுத்திரனே, நீ பரதேசம் போகும்படி பிரயாண சாமான்களை ஆயத்தப்படுத்தி பகற்காலத்திலே, அவர்கள் கண்களுக்கு முன்பாக பிரயாணப்படு. உன் ஸ்தலத்தைவிட்டு, வேறே ஸ்தலத்துக்கு அவர்களுடைய கண்களுக்கு முன்பாகப் புறப்பட்டு போ.

**வழியில் உன்னை காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னை கொண்டுபோய் சேர்க்கிறதற்கும்**

**இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். –** ஆமென், அல்லேலுாயா!

**பக்தன் பாடுகிறார்**

உன் வழிகளிலெல்லாம், உன்னை தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி, தங்கள் கரங்களில் ஏந்திடுவார்
உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே

இந்த மாதத்திலே உன் வழிகளெல்லாம் உன்னை தூதர்கள் காத்திடுவார்கள். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு தங்கள் கரங்களில் அவர்கள் ஏந்தி செல்வார்கள். ஏனெனில், நீ உன்னதமானவரின் மறைவிலிருக்கிறாய். ஆதலால்,

**நான் ஒரு தூதனை உனக்கு முன்பாக அனுப்புகிறேன்.**